**செய்தி வெளியீடு எண்: 053** **நாள்: 22.01.2020**

**செய்தி வெளியீடு**

நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்களின் 124ஆவது பிறந்தநாளை முன்னிட்டு தமிழக அரசின் சார்பில், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், சென்னை, மெரினா கடற்கரை, காமராஜர் சாலையில் அமைந்துள்ள அன்னாரின் திருவுருவச் சிலையின் கீழ் அலங்கரித்து வைக்கப்படவுள்ள திருவுருவப் படத்திற்கு நாளை(23.01.2019) காலை 10.00 மணியளவில் மலர் தூவி மரியாதை செலுத்தவுள்ளார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் செயல்படும் மாண்புமிகு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்களின் தலைமையிலான அரசு, தமிழ்ச் சான்றோர்கள், விடுதலைப் போராட்ட தியாகிகள் மற்றும் தலைவர்கள் ஆகியோரை பெருமைப்படுத்தும் வகையில், அன்னார்களது பிறந்தநாளன்று தமிழ்நாடு அரசின் சார்பில் ஆண்டுதோறும் மாலை அணிவித்து, மரியாதை செலுத்தி, விழா கொண்டாடப்பட்டு வருகிறது. அந்த வகையில், நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்களின் பிறந்த தினமான ஜனவரி 23ஆம் நாள், ஒவ்வொரு ஆண்டும் அரசு விழாவாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்கள் ஜானகிநாத் – பிரபாவதி தம்பதியினருக்கு ஒன்பதாவது மகனாக 1887ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 23ஆம் நாள் ஒரிசாவில் கட்டாக் நகரில் கோதனியா என்னும் ஊரில் பிறந்தார். நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்கள் கட்டாக்கிலிருந்த ‘பிராட்டஸ்டண்ட்’ யுரோப்பியன் பள்ளியில் தனது ஐந்தாவது வயதில் சேர்க்கப்பட்டு, ஏழாண்டு காலம் அப்பள்ளியில் படித்தார். நேதாஜி அவர்கள் அறிவுக்கூர்மையுள்ள மாணவர் என்பதால் நல்ல நினைவாற்றலைப் பெற்று முதல்தர மாணவராகத் திகழ்ந்தார்.

நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்கள் இளைஞராய் இருக்கும்போதே, விடுமுறை நாளான ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் வீடு வீடாகச் சென்று ஆடைகள் மற்றும் உணவுப் பொருட்களை பெற்று அவற்றை ஏழைகளுக்கு பகிர்ந்து கொடுத்தார். ஏழை மாணவர்களை அழைத்துக்கொண்டு வெள்ள நிவாரணப் பணிகள், நோயுற்றோருக்கு உதவுதல் போன்ற மனிதநேய தொண்டுகளையும் செய்தார்.

1919ஆம் ஆண்டு பி.ஏ.தத்துவம் படிப்பில் முதல் வகுப்பில் தேர்ச்சியடைந்தார். தந்தையின் விருப்பத்தின்பேரில் இங்கிலாந்து சென்று ஐ.சி.எஸ். படித்தார். ஐ.சி.எஸ்.தேர்வில் நேதாஜி அவர்கள் தேர்ச்சியடைந்தார். உயர்வான படிப்பு படித்து உயர் பதவி வகிக்க வேண்டும் என்ற பெற்றோரின் எண்ணமும், விடுதலைப் போராட்டத்தில் ஓயாது உழைக்க வேண்டும் என்ற அவரது எண்ணமும் போட்டியிட்டன. இறுதியில், நேதாஜி அவர்கள் தன் அண்ணனுக்கு ''இந்திய நாட்டின் விடுதலைக்கு என்னை முழுமையாக அர்ப்பணித்து, ஐ.சி.எஸ். பதவியை விட்டுவிட முடிவு செய்துள்ளேன்'' என்று கடிதம் எழுதினார். அதன்படி ஐ.சி.எஸ் பணியினை துறந்தார். உயர் பதவியை உதறித் தள்ளிய நேதாஜி அவர்களை இந்திய மக்கள் வெகுவாகப் பாராட்டினர்.

இளமை துடிப்பு கொண்ட நேதாஜி அவர்களுக்கு மகாத்மா காந்தியடிகளின் மென்மையான அணுகுமுறைகள் ஒத்துவரவில்லை. ஆங்கில அரசோடு நேருக்கு நேர் போரிட்டு வெற்றிபெற வேண்டும் என்று விரும்பினார். 1939ஆம் ஆண்டு மே மாதம் 'பார்வர்டு பிளாக்' என்ற கட்சியைத் தொடங்கினார். வங்க மாநிலத்தில் இக்கட்சியில் ஏராளமான இளைஞர்கள் சேர்ந்தனர். நேதாஜியின் செல்வாக்கு நாளுக்கு நாள் வளர்வதைக் கண்ட ஆங்கிலேய அரசு 1940ஆம் ஆண்டு அவரை கைது செய்தது. 11ஆவது முறையாக சிறையில் அடைக்கபட்டார். வீட்டுச் சிறையில் இருந்த நேதாஜி அவர்கள், தன்னை யாரும் அடையாளம் காணாத அளவிற்கு மாறுவேடத்தில் டெல்லி சென்று, இந்தியாவின் எல்லையைக் கடந்து 1941ஆம் ஆண்டு காபூல் நகரை அடைந்தார்.

பின்னர் அங்கிருந்து, ரஷ்யா சென்று உதவியை நாடினார், ஆனால் ரஷ்யாவில் அப்போதிருந்த அரசியல் நெருக்கடியால், ரஷ்யா அதற்கு சம்மதிக்கவில்லை. பின்னர், ஜெர்மன் சென்று முஸோலினியைச் சந்தித்தார். தனி நபராய் இருந்துகொண்டு உலக நாடுகளுக்கு சவால் விடும் நேதாஜி அவர்களின் தீரத்தை அறிந்த ஹிட்லர், அவரைச் சந்தித்தார். இச்சந்திப்பின் காரணமாக, இந்திய தேசிய இராணுவத்திற்கு நல்ல பயிற்சியைப் பொறுப்புடன் அளிக்கும்படியும், மேலும், இந்தியாவிற்கு எல்லா உதவிகளையும் அளிக்கும்படியும் ஹிட்லர் தன்னுடைய தலைமைத் தளபதிக்கு ஆணையிட்டார்.

இந்திய தேசியப்படை தலைவனின்றி தவிப்பதையும், அதை உருவாக்கிய ராஷ்பிகாரி போஸ் தளர்வுற்றிருப்பதையும் அறிந்த நேதாஜி அவர்கள், ஜப்பான் சென்று அப்படைக்கு புத்துயிர் அளித்து விடுதலைப் போரை தீவிரமாக நடத்தவேண்டும் என்று எண்ணினார். ஜப்பான் சென்ற நேதாஜி அவர்கள் ஜப்பானில் இருந்துகொண்டே வானொலி மூலம் இந்திய மக்களிடையே உரையாற்றினார். பின்னர், சிங்கப்பூர் சென்ற நேதாஜி அவர்கள், சிங்கப்பூரில் நடைபெற்ற மாநாட்டில் ''நமது தேசியக்

கொடி டெல்லி செங்கோட்டையில் பட்டொளி வீசிப் பறக்கும் நன்நாளை விரைவில் காண, "டில்லி சலோ" என்று முழக்கமிட்டார்.

இந்தியாவின் விடுதலை ஒன்றே தமது குறிக்கோள் என்று நேதாஜி அவர்கள் வாழ்ந்தார். 18.08.1945 அன்று நேதாஜி அவர்கள் சென்ற விமானம் விபத்துக்குள்ளாகியது. அந்த விபத்தில் அவர் மரணமடைந்திருக்கலாம் எனக் கூறப்படுகிறது. அவரது மரணம் குறித்த சர்ச்சைகள் இன்றளவும் நிலவி வருகின்றன.

நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்களின் 124ஆவது பிறந்தநாளை முன்னிட்டு, தமிழக அரசின் சார்பில் சென்னை, மெரினா கடற்கரை, காமராஜர் சாலையில் அமைந்துள்ள நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்களின் திருவுருவச் சிலையின் கீழ் அலங்கரித்து வைக்கப்படவுள்ள திருவுருவப் படத்திற்கு நாளை(23.01.2019) காலை 10.00 மணியளவில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், வாரியத்தலைவர்கள், கூட்டுறவு சங்கங்களின் பிரதிநிதிகள் மற்றும் சீர்மிகு பெருமக்கள் மலர் தூவி மரியாதை செலுத்துவார்கள்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**